

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.5.2025) நீலகிரி மாவட்டத்தில் நடைபயிற்சி மேற்கொண்டபோது, கால்பந்து விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களுடன் உரையாடி, புகைப்படம் எடுத்துக்கொண்டார். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.5.2025) நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்று, எம்.ஆர்.ஐ. மற்றும் சி.டி. ஸ்கேன் போன்ற நவீன மருத்துவ உபகரணங்களின் வசதியுடன் நோயாளி களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரூ, நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர் எம். கீதாஞ்சலி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.5.2025) நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்று, பார்வையிட்டு ஆய்வு செய்து, நோயாளிகளிடம் மருத்துவ வசதிகள் குறித்தும், அவர்களது தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரூ, நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர் எம். கீதாஞ்சலி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.5.2025) நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரிக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, மருத்துவக் கல்லூரி மாணவர்களுடன் கலந்துரையாடி, அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரூ, நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர் எம்.கீதாஞ்சலி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (14.05.2025) மகாராஷ்டிரா மாநிலம், மும்பை, வாடாவில் J.Kumar Infraprojects என்ற தொழிற்பட்டறைக்கு நேரில் சென்று, சென்னையில் சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை அமைக்கப்பட்டு வரும் நான்கு வழித்தட உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு தேவையான இரும்பு தூண்கள் (Iron Pillars), தூலகங்கள் (Beams) ஆகியவற்றின் தரம் மற்றும் அளவுகள் குறித்து பார்வையிட்டு அந்நிறுவன தொழில்நுட்ப பணியாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு) கே.ஜி.சத்தியபிரகாஷ், சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) .இரா.சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை அமைக்கப்படும்

# உயர் மட்டப் பாலத்திற்கான இரும்புத் தூண்களை - மும்பையில் அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார்!

## தரம் மற்றும் அளவுகளையும் சோதனையிட்டார்!

மும்பை, மே 16 -

மகாராஷ்டிரம் மாநிலம், மும்பையில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை அமைக்கப்படவுள்ள உயர் மட்டப் பாலத்திற்கான இரும்பு தூண்கள்(Iron Pillars), தூலகங்கள்(Beams) அதன் தரம் மற்றும் அளவுகளை ஆய்வு செய்தார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (14.05.2025) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மகாராஷ்டிரா மாநிலம், மும்பை, வாடா என்னும் இடத்தில் அமைந்துள்ள M/s.J.Kumar Infraprojects என்ற தொழிற்பட்டறையில் தயாரிக்கப்பட்டு வரும், சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை, நான்கு வழித்தட உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு, இரும்பு தூண்கள்(Iron Pillars), தூலகங்கள் (Beams) அதன் தரம் மற்றும் அளவுகள் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை மாநகரின் மையப்பகுதியில் உள்ள மிக முக்கிய சாலையான அண்ணா சாலையில், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வண்ணம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை 3.20 கி.மீ. தூரத்திற்கு, 15 மீ. அகலத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்க ரூ.621 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 19.1.2024 அன்று முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

**புதிய தொழில் நுட்ப முறையில் பணிகள்!**

முக்கிய அம்சங்களான, உயர்மட்ட சாலை மேம்பாலம், மெட்ரோ இரயில் சுரங்கபாதை உள்ள இடங்களில் 2 கி.மீ. தூரத்திற்கு அமைக்கப்பட்டு வருகிறது. இந்த இடங்களில் மண்ணின் உறுதித் தன்மை (CBR) குறைவாக உள்ளது. அதனை அதிகரிக்கும் வகையில் "ஜியோ சிந்தெட்டிக் லேயர்ஸ் (Geo Synthetic Layers)" என்ற புதிய தொழில்நுட்ப முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த புதிய தொழில்நுட்பத்தினால் மண்ணின் உறுதித் தன்மை அதிகரித்து பாலத்தைத் தாங்கும் வகையிலும் மற்றும் மெட்ரோ இரயில் சுரங்கப்பாதை பாதிக்காத வகையில் அமைக்கப்பட பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த சாலையில் 7 முக்கிய சாலைச் சந்திப்புகளை கடக்கும் வண்ணம் இந்த உயர்மட்டச் சாலை மேம்பாலம் அமைக்கப்பட்டு வருகிறது. இதனால், போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள காலங்களில் பயண நேரம் 30 முதல் 35 நிமிடம் ஆகிறது. இந்த உயர்மட்டப் பாலம் அமைக்கப்படுவதால் பயண நேரம் 3 நிமிடமாக குறையும்.

**தூலகங்களின் தரம் குறித்து ஆய்வு!**

ஆகவே, சைதாபேட்டை முதல் தேனாம்பேட்டை வரை அமைக்கப்படும் உயர்மட்டப் பாலத்திற்கு பயன்படுத்தப்படவுள்ள இரும்பு தூண்கள் தயாரிக்கப்படும் மும்பை, வாடாவில் உள்ள M/s.J.Kumar Infraprojects என்ற தொழிற்பட்டறையில் தயாரிக்கப்பட்டு வரும் இரும்பு தூண்கள்(Iron Pillars), தூலகங்கள்(Beams), அதன் தரம் மற்றும் அளவுகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

இந்த நிகழ்வின்போது, தலைமைப் பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கே.ஜி.சத்தியபிரகாஷ், சிறப்பு அலுவலர் (தொழில் நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ் சினிமா உலகில்

# இசைஞானி இளையராஜாவின் பொன்விழா ஆண்டு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வாழ்த்துச் செய்தி!

சென்னை, மே 16 -

தமிழ் சினிமா உலகில் இசைஞானி இளையராஜாவுக்கு இது பொன்விழா ஆண்டு. அதனையொட்டி அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இசைஞானி புகழ் வாழ்க என்று பாராட்டியுள்ளார்.

இது குறித்து அவரது வாழ்த்துச் செய்தி வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அன்புடன் "இசைஞானி" என அழைக்கப்பட்டவர் இசையமைப்பாளர் இளையராஜா அவர்கள். அந்தப் பெயரே இன்றைக்கு தமிழரின் இசை அடையாளமாக உலகெங்கும் ஒலிக்கிறது.

இந்திய அரசின் உயரிய விருதுகளான பத்மபூஷண் மற்றும் பத்மவிபூஷண் விருதும், நான்கு முறை சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருதும், "மேஸ்ட்ரோ" என்று அனைவராலும் அழைக்கப்படுபவரும், இலண்டன் சிம்பொனி ஆர்க்கெஸ்ட்ராவுடன் பணியாற்றிய முதல் இந்திய இசையமைப்பாளர் என்ற பெருமை பெற்றவரும், 8,500மேற்பட்ட பாடல்களுக்கு இசையமைத்தவரும், 1,500க்கும் அதிகமான திரைப்படங்களுக்கு பின்னணி இசையமைத்தவரும், மாநிலங்களவை உறுப்பினருமான இளையராஜா அவர்கள் 1976ஆம் ஆண்டு வெளிவந்த "அன்னக்கிளி" என்ற திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகி, தமிழ் சினிமா இசையில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்திய இசைஞானி அவர்களுக்கு நேற்று முன்தினம் (14.05.2025) தமிழ் சினிமா உலகில் பொன்விழா ஆண்டு என்பது நமக்கெல்லாம் பெருமையளிக்கிறது.

இந்நாள் இசைஞானி அவர்களின் பொன்னாள். தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பாக நெஞ்சார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இசைஞானி இளையராஜாவின் ராஜ இசை என்றென்றும் இசைத்துக் கொண்டே இருக்கட்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

வாழ்க இசை! வாழ்க இசைஞானியின் புகழ்!

இவ்வாறு அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் அவர்களின் நான்கு ஆண்டு சாதனை விளக்க புத்தகத்தினை சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி பொன்னார்பேட்டை பகுதி 35 வது வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று அமைச்சர் இரா.இராஜேந்திரன் நான்காண்டு சாதனைகளை எடுத்துரைத்து பொதுமக்களிடம் புத்தகத்தினை வழங்கினார் பொன்னம்மாபேட்டை பகுதி செயலாளர் கேபிள் ராஜா, 35 வது வட்டக் கழக செயலாளர் சம்பத், 35 ஆவது வட்ட மாமன்ற உறுப்பினர் பச்சையம்மாள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்